# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1961/34 - 2016 අප්‍රේල් මස 08 වැනි සිකුරාදා - 2016.04.08

*1961/34 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978 (X).*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், லக்ஸ்மன் கிரிஎல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதும் PV 66705 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதுமான கம்பனி ஒன்று, காட்சு (KAATSU) - மிக உயர்ந்த மருத்துவ தொழில்நுட்பவியல் பயிற்சி நிலையம் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கை ஒன்றைப் பெற்றிருந்து, அவற்றின் சுருக்கீடுகள் இதற்கானII ஆம் அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் தரப்பட்டுள்ளவையும் இதற்கான II ஆம் அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவையுமான பட்டங்களை அளிப்பதற்கு இட்டுச் செல்லுகின்ற அதன்கண் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காகப் பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக காட்சு (KAATSU) - மிக உயர்ந்த மருத்துவ தொழில்நுட்பவியல் பயிற்சி நிலையம் (பிறைவேட்) லிமிட்டெட்டை (KIU) இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. காட்சு (KAATSU) - மிக உயர்ந்த மருத்துவ தொழில்நுட்பவியல் பயிற்சி நிலையம் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) ஆனது உயிரியல் மருத்துவ விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டத்திற்காக 120 வரவு மணித்தியாலங்களுடன் 4 வருடங்களிற்கான கற்கைநெறிக் காலப்பகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. காட்சு (KAATSU) - மிக உயர்ந்த மருத்துவ தொழில்நுட்பவியல் பயிற்சி நிலையம் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) ஆனது உளவியல் நிகழ்ச்சித்திட்டத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டத்திற்காக நுழைவுத்தகைமை ஒன்றாக ஆங்கில மொழிப் பரீட்சை ஒன்றில் தோற்றியிருப்பவராக இருத்தல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *பட்டங்கள்* | *பட்டங்களுக்கான சுருக்கீடுகள்* |
| உயிரியல் மருத்துவ விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் | BSc Hons (BiomedSc) |
| உளவியலில் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் | BSc Hons (Phychology) |
| மனிதவளத்தில் முகாமைத்துவமாணி சிறப்புப்பட்டம் | BM Hons (Human Resource) |
| சந்தைப்படுத்தலில் முகாமைத்துவமாணி சிறப்புப்பட்டம் | BM Hons (Marketing) |
| கணக்கியலில் முகாமைத்துவமாணி சிறப்புப்பட்டம் | BM Hons (Accounting) |

லக்ஸ்மன் கிரிஎல்ல,
பல்கலைக்கழகக் கல்வி மற்றும்
நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
2016, ஏப்பிறல் 08.

4- 951

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.